# தனியாள் விருத்தி வழிகாட்டி

## 16 – 18 வயது சிறுவர்களுக்கானது

**Department of Probation & Child Care Services,**
Northern Provincial Council, Sri Lanka

**Published by**

CCH
Centre for Children's Happiness

**Funded by**

THINK 2WICE




## தனியாள் விருத்தி வழிகாட்டி

**16– 18 வயது சிறுவர்களுக்கானது**

### பொறுப்பு திறப்பு

சிறுவர்களின் ஆளுமை, திறன் விருத்தியை மேம்படுத்தும் முகமாக இவ் வழிகாட்டி நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் உள்ளடக்கங்களுக்கு குறித்த அலகுகளின் இதழாசிரியர்கள், ஆக்கவாளர்கள் பொறுப்பாளர்கள் ஆவார்கள். அத்துடன் இந் நூலின் இதழாசிரியர், ஆக்கவாளர்களின் கருத்துக்களை நிறுவனத்தின் உத்தியோக பூர்வ கருத்தாகக் கருதலாகாது.

**Copyright :** Department of Probation & Child Care Services, Northern Provincial Council, Sri Lanka 2020

**Published by :** Center for Children's Happiness (GTE) Ltd. 2020

**Funded by :** Think 2wice Association

**Design :** Mareen Tharmila Jeyaratnam (CCH)

**Printed by :**

# ஆசிச்செய்தி

மாற்றுப் பராமரிப்புக் கொள்கையின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 2000 வரையான சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவர்கள் தங்களின் கற்கைக்காலம் முடிவடைந்த பின்னர் குறிப்பாக 14 – 18 வயதிற்கிடைப்பட்டோர் எதிர்காலத்தில் சமூகத்தில் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளும் வகையில் தம் இலக்கினைத் தாமே தயாரித்து தமது வளர்ச்சியைத் தாமே கண்காணித்துக் கொள்ளக்கூடிய வகையிலான பொறிமுறையினை உருவாக்கவேண்டிய கட்டாயத்தின் அடிப்படையில் தனியாள் விருத்திக் கையேடானது உருவாக்கப்பட்டது.

குறிப்பாக 14 – 18 வயதிற்கிடைப்பட்ட சிறார்கள் சிறுவர் இல்லங்களில் வசிக்கும் பொழுதும், சமூகமயமாதலின் பொழுதும் மற்றும் சமூகத்தில் வசிக்கும் பிள்ளைகள் தமது எதிர்கால சுபீட்சத்துக்காகவும் சரியான இலக்குகளை நிர்ணயித்து செயற்பட்டு பயனுள்ள நீண்ட நிலைத்திருக்கக்கூடிய தீர்மானங்களை மேற்கொண்டு வாழ்க்கையில் வெற்றியீட்டுவதற்கு உதவி புரியக்கூடிய வகையில் இக்கையேடானது விளக்கமாகவும், சிறப்பாகவும் காணப்படுகின்றது.

இக்கையேடானது 14 – 18 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்களின் வெற்றிக்கான குறிப்புக்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றமை சிறார்களுக்கான வரப்பிரசாதமாக அமைகின்றது. இம் முயற்சியானது வெற்றிபெறவேண்டும் என எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி சுரேன் ராகவன்
ஆளுநர்
வடக்கு மாகாணம்
16.10.2019

# அணிந்துரை

# முன்னுரை

தனியாள் முழுமையான விருத்தித் திட்டம் ஒன்று நன்னடத்தை திணைக்களத்தினால் செயல்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டமாக உருவாகியதையிட்டு நான் பெரிதும் மனமகிழ்ச்சியடைகிறேன்.

SLIDA நிறுவனத்தினரால் இலங்கையின் நாடளாவிய சேவையின் தரம் I உத்தியோகத்தர்களுக்கு விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட தனியாள் அபிவிருத்தித்திட்டத்தின் வடிவத்தினை அடிப்படையாகக்கொண்டு நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ் சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்பட்டு வரும் பிள்ளைகளின் உயரிய நலனினைக் கருத்திற்கொண்டு அவர்கள் தம் இலக்கினை அவர்களாகவே தயாரித்து தமது முன்னேற்றத்தினை தாமே கண்காணிக்கக்கூடிய ஒரு பொறிமுறையினை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

தனியாள் முழுமையான விருத்தித் திட்டமானது பதின்ம வயதினரின் குறிப்பாக 16 – 18 வயதிற்குட்பட்ட சிறார்கள் சிறுவர் இல்லங்களில் வசிக்கும் பொழுதும், சமூகமயமாதலின் பொழுதும் அத்தோடு சமூகத்தில் வசிக்கும் பிள்ளைகளுக்கும் இந்த தனியாள் விருத்தித்திட்டமானது அவர்களுடைய வாழ்க்கையின் தொலைநோக்கு இலக்கைத் தீர்மானிப்பதற்கும் அதனை தர்க்கரீதியாக அணுகி நடைமுறைப்படுத்துவதற்கும் இந்த தனியாள் விருத்தித்திட்டம் அவர்களை இட்டுச் செல்லும்.

அத்தோடு மாறுபட்ட சூழலில் கல்வி இலக்குகளையும் தொழில் இலக்குகளையும் சமூகவாழ்க்கை இலக்குகளையும் தீர்மானிப்பதற்கு தூண்டக்கூடிய கருவியாகவும் இது அமையும்.

சிறுவர் அபிவிருத்தி நிலையப் பிள்ளைகளின் பெற்றோர், பாதுகாவலர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்களின் வழிகாட்டலுடன் இணைந்து தயாரிக்கப்படுகின்ற இந்த தனியாள் விருத்தித்திட்டமானது 16 – 18 வயதுக்குட்பட்ட பதின்மவயதுச் சிறார்களுடைய வாழ்க்கைக்கான இலக்கு, குறிக்கோள் என்பவற்றை தீர்மானிப்பதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் உந்துசக்தியாக அமைவதுடன், மேலும் அது 18 வயதின் பின்னரும் இந்தப் பழமுறைகளைப் பின்பற்றுவதன் ஊடாக அவர்கள் தமது வாழ்நாள் இலக்கினை அடைவதற்கான வழிகாட்டியாகவும் இருக்கும்

தனியாள் முழுமையான விருத்தித்திட்டத்தினை சிறுவர்களுக்காக மாற்றி

அமைத்தலானது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் (NISD)ஆலோசனைகள் பெறப்பட்டு நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் தயாரித்துள்ளது.

இத்திட்டத்தின் அறிமுகப் பயிற்சிப்பட்டறையானது சிறுவர் அபிவிருத்தி நிலைய முகாமையாளர்கள், சிறுவர் அபிவிருத்தி நிலைய இல்லப்பணியாளர்கள், சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர்கள், நிலையப்பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர்கள், நன்னடத்தை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு நடாத்தப்பட்டது.

இத்திட்டத்தின் பரீட்சார்த்த பயிற்சிப்பட்டறை 2018.07.04, 2018.07.05 ஆம் திகதிகளில் கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் அபிவிருத்தி நிலையச் சிறுவர்களுக்கும் 2018.07.18 ஆம் திகதி மகாதேவா சிறுவர் அபிவிருத்தி நிலையச் சிறுவர்களுக்கும் நடாத்தப்பட்டது.

இத்திட்டத்தினை வினைத்திறன்மிக்க செயற்திட்டமாக மாற்றும் நோக்குடனும் இத்திட்டத்தின் ஆவணங்களின் உறுதித்தன்மையை ஆராயும் நோக்குடனும் 2018.07.12 ஆம் திகதி கிளிநொச்சியில் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறையில் யுனிசெப்(Unicef) நிறுவனத்தின கொழும்பு மற்றும் வட மாகாண பிரதிநிதிகள், சிறுவர் அபிவிருத்தி நிலைய முகாமையாளர்கள், சிறுவர் அபிவிருத்தி நிலையப் பணியாளர்கள், சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர்கள் , நன்னடத்தை அலுவலர்கள், நிலையப்பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு காண்பிக்கப்பட்டு அவர்களின் வரவேற்பினை அதிகளவில் பெற்றது. மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி செயலகத்திடமிருந்து நிதி பெறப்பட்டதுடன் அவ் உயர் அதிகாரிகளின் பாராட்டினையும் பெற்றது.

இத்திட்டத்தின் ஆரம்பக் கட்டம் வடமாகாணத்திலுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் ஊடாக பராமரிக்கப்பட்டு வரும் சிறுவர்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கும் இரண்டாம் கட்டமாக சமூகச் சூழலில் வாழும் பிள்ளைகளுக்கு நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

16 – 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் தனியாள் விருத்தித்திட்டத்தினை நன்னடத்தை திணைக்களம் வெளியீடு செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தி.விஸ்வரூபன்,

ஆணையாளர்,

நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்,

வடமாகாணம்.

16.10.2019

# “தனியாள் விருத்தி வழிகாட்டி” நூலில் பேணப்படும் சிறுவர் உரிமைகள்




## சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

# பொருளடக்கம்

01 அறிமுகம்

08 தனியாள் முழுமையான விருத்தித்திட்டத்தின் அவசியம்

10 தனியாள் விருத்தித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்

11 அட்டைச்செய்தி

19 எனது இலட்சியம்

26 ஏணிப்படிகள் முறை

31 SWOT ஆய்வு

36 வினாக்கொத்து

40 தொழிலுக்கான திறவுகோல்

47 தொழிற் திறவுகோலின் அடிப்படையில் தனிமனித ஆளுமைக்குப் பொருந்தும் தொழிற் துறைகள்

54 16–18 வயதிற்குட்பட்ட சிறார்களின் தனியாள் முழுமையான விருத்தித் திட்டம் Individual Development Plan

69 நன்றியுரை






## சிறந்த கற்றலுக்கான எட்டு தந்திரோபாயங்கள்

(Translated by the Department of Probation and Child Care Services, Northern Province)

**Dr.Marty Lobdell என்பவரால் கடினமில்லாத சிறந்த கற்றலுக்கான எட்டு தந்திரோபாயங்களை கவனத்தில் கொள்ளுமாறு குறிப்பிடுகின்றார்.**

01

**நேர அட்டவணையினை திட்டமிட்டு கற்றல்:** ஒவ்வொரு நாளும் ஒரு முக்கிய பகுதியைப் படிக்கவும். அத்துடன் வகுப்பில் கலந்து கொள்வதும் சம அளவிலான முக்கியமான விடயமாகும். நீங்கள் வகுப்பிற்கு தயாராகும் போது சரியான நேரத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

02

**கற்க வேண்டிய கற்றலை 25–30 நிமிட அமர்வுகளாக பிரித்து கற்றல்:** இந்த காலகட்டத்தில் கற்றல் திறன் குறைவதற்கான சந்தர்ப்பம் வரக் கூடியதாக இருக்கும். எனவே ஒவ்வொரு 30 நிமிட இடைவெளிக்குப் பிறகும் நீங்கள் முனைப்பான ஒன்றை செய்வதற்காக 5 நிமிட இடைவெளியை எடுத்துக் கொள்ளுங்கள். முழுமையான கற்றல் அமர்வுகளை முடித்த பிறகு உங்களுக்கான பெரிய அளவிலான வினைதிறனைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் வலுவூட்டப்பட்ட விஷயங்களை நாம் இன்னும் அதிகமாக செய்ய முனைகிறோம். புறக்கணிக்கப்படும் விடயங்களை செய்ய தயங்குகிறோம்.

03

**கற்றலுக்கான வலுவான சூழலை உருவாக்குதல்:** தெரிவு செய்யப்பட்ட சூழல் உங்கள் நடத்தையை தீர்மானிப்பதுடன் உங்கள் கற்றல் திறனை ஊக்குவிக்கக்கூடியதான சூழலை வடிவமைக்கவும்.

04

**சுறுசுறுப்பாக படித்தல்:** வாசிக்கும் போது தனியாக வாசிப்பதோடு மட்டுமல்லாது அதன் மையக்கருத்து, உண்மை விடயம் எது என்பதனையும் கிரகித்துக் கொள்ள வேண்டும். எனவே தேவையான சிறந்த விடயங்களை குறித்துக்கொள்வதற்கு முன்பாக உங்களை நீங்களே வினாடிவினா மூலம் படித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு கற்ற விடயங்களை உங்களுடைய நண்பர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும்.

05

**வகுப்பில் சிறந்த குறிப்புக்களை எடுத்தல்:** ஆரம்ப கற்றலை மேம்படுத்த வகுப்பிற்கு பிறகு அவற்றை விரைவாக விரிவுபடுத்திக் கொள்வது அவசியமானதாகும்.

06

**கற்ற விடயத்தை வேறொருவருக்கு கற்பித்தல் அல்லது சுருக்கமாக விளங்கப்படுத்துதல்:** விடயங்களை மெருகூட்ட முடியாமல் போகும் என்பதனால் இது உங்களுக்கு விளங்கிக் கொள்வதில் உள்ள சிறு இடைவெளிகளை (Pen point gaps) புரிந்து கொள்வதற்கு உதவும்.

07

**பாடப்புத்தகத்தை திறம்பட பயன்படுத்தவும்:** SQ3R **முறையை பயன்படுத்தவும்.**

S-Survey
Q-Question
3R- Read, Recite, Review

# Get Studying with the SQ3R Method

S Q 3R

**SURVEY**

S

Skim the text

**QUESTION**

Q

Ask yourself questions about what you have read

**READ**

R

material carefully

R

**RECITE**

what you read out loud, in your own words

R


**REVIEW**

what you read for main ideas and anything you don't understand

08

**கற்றல் உண்மையை தெரிந்து கொள்ள நினைவுக்குறியீடுகள், முதலெழுத்துக்கள், சுருக்கெழுத்துக்கள் மற்றும் பட வரைபுகளை பயன்படுத்த வேண்டும்:** இந்த உத்திகள் தகவல்களை குறிப்புகள் எடுப்பதிலும் பார்க்க ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு இலகுவானதாகும்.

# நோக்கம்
(Object)



16-18 வயதிற்கிடைப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் வதியும் சிறுவர்கள் தாமே தமக்கான இலக்கை நிர்ணயித்தல்

அதனை அடைவதற்கான வழிமுறைகளை வகுத்தலும், பின்பற்றலும்

தமது முன்னேற்றத்தினை தாமே கண்காணித்தல் மூலம் தமது இலக்கை அடைதலை நோக்கமாகக் கொண்டது.

# செயற்பாட்டு ஒழுங்குமுறை (Process )

- Total Development plan, Ladder matrix, SWOT matrix,பற்றிய அறிமுகம்.
- அவர்களை அவர்கள் குறித்துச் சிந்திக்க தூண்டுதல்.
- அவர்களுடைய பலம்,பலவீனம், அச்சுறுத்தல், சந்தர்ப்பங்கள் போன்றவற்றை அடையாளப்படுத்த உதவி புரிதல்.
- அடையாளப்படுத்தப்பட்டவற்றை ஆய்வு செய்ய வழிகாட்டுதல்.
- பலவீனங்கள், அச்சுறுத்தல்கள் என்பவற்றை களைவதுடன் அவற்றை சாதகமாக்கிக்கொள்வதற்கு வழிகாட்டுதல்.
- நோக்கம், இலக்கு என்பவற்றை அமைக்கத் தூண்டுதல், உதவி புரிதல் மற்றும் வழிகாட்டுதல்.
- சிறுவர்களின் தேவைகளை இனங்கண்டு அவர்களை வகைப்படுத்தி அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவி புரிதல்.
- அவர்கள் சார்பான திட்டங்களை தயாரித்தலும் அதற்கான வழிகாட்டல்களை வழங்குதலும்.
- ஆவணப்படுத்தலும் அதனை தனிப்பட்ட ஆவணமாக மாற்றியமைத்து அவர்கள் தொடர்ந்து அதனை பிரயோகிப்பதற்கு உதவி புரிதல்.
- காலத்துக்குக்காலம் கிரமமான முறையில் மீளாய்வு செய்தலும், அவதானித்தலும்.
- பிள்ளைகள் தாமாகவே தம்மை மீளாய்வு செய்வதற்கும் தமது செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கும் வசதிப்படுத்தல்.
- பிள்ளைகளால் தயாரிக்கப்பட்ட திட்டத்தில் பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக பிள்ளைகளால் அடையாளப்படுத்தப்பட்ட அல்லது பிள்ளைகளால் எதிர்பார்க்கப்படுகின்ற வளங்களின் கிடைப்பனவான.

1. முறைசாராவளம் (குடும்பவளம்)– முறைசாராவளத்தினை பயன்படுத்துவதற்கு வசதிப்படுத்தல்.
2. சமுதாயவளங்கள் – பிள்ளைக்கு கிடைக்கக்கூடிய சமுதாயவளங்கள் தொடர்பான நிறுவனங்களுக்கு இணைப்பினை ஏற்படுத்த பரிந்துரை செய்தல்.
3. முறைசார்வளம் – அரசாங்க திணைக்களங்களால் நிறைவு செய்ய வேண்டிய தேவைகள் தொடர்பாக திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல்.

# வெளியீட்டு விளைவுகள்

பதின்மவயது இளையோர் தமது கல்வி, தொழில், சமூகப்பங்கு போன்ற இலக்கினை தீர்மானிப்பதற்கும் இலக்கு, தூரநோக்கு என்பவற்றை தீர்மானிப்பதற்கும் அதனை அடைவதற்கும் வசதிப்படுத்தும்

தான் சார்ந்த சுற்றாடல் அல்லது சூழலைப்பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவும். தான் சார்ந்த சூழலிலும் இருக்கக்கூடிய பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் ஆகியவற்றை தெளிவாக வரையறுக்க உதவும்

கல்வி வாய்ப்புக்களையும் தன்னுடைய தொழில்வாய்ப்புக்களையும் தெரிவு செய்யும் பொழுது சீர் தூக்கிப்பார்ப்பதற்கும் அதனை வரையறுப்பதற்கும் உதவும்.

# 01. தனியாள் முழுமையான விருத்தித்திட்டத்தின் அவசியம்

1

- தன்னுடைய வாழ்க்கை இலக்கினை திட்டமிடுவதற்கும் ஒரு பிள்ளை தன்னுடைய ஆற்றலை உணர்ந்து கொண்டு தனக்குத் தேவையான முறைசார்ந்த கல்வி மற்றும் முறைசாராக்கல்வியைத் தெரிவு செய்வதற்கும் தன்னுடைய தொழில் வாழ்க்கையைப்பற்றிய தீர்மானத்தையும் எடுக்கமுடியும்.

2

- க.பொ.த .சாதாரணதரம், க.பொ.த உயர்தரம் போன்ற கல்விப் பெறுபேறுகளை ஊக்குவிக்கும்

3

- அவர்களுக்கு பல்வேறு உயர்கல்வி வாய்ப்புக்களில் மிகப்பொருத்தமானதும் இலாபகரமானதுமான வாய்ப்பினை தெரிவு செய்வதற்கு உதவும்.

## 1.1 இடையீட்டுப்பழுமுறைகள்

01

- நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களுக்கு நன்னடத்தை உத்தியோகத்தர்கள் அல்லது பயிற்றப்பட்ட ஏனையோர் பிரதான வசதிப்படுத்துனராக இருந்து பிள்ளைகளுக்கான பயிற்சிப் பட்டறையை நடத்துதல்.

02

- தனியாள் விருத்தித்திட்டத்தை தயாரிப்பதற்கு 1G–18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை இணைத்து சிறுகுழு கலந்துரையாடல் மற்றும் விரிவுரைகள் மூலம் பிள்ளைகளுக்கான தனியாள் விருத்தித் திட்டத்தை தயாரிப்பதற்கு அறிவூட்டுதல்.

03

- பிள்ளைகளால் தயாரிக்கப்பட்ட தனியாள் விருத்தித்திட்டத்தை பெற்றோர், பாதுகாவலருடன் இணைந்து பிள்ளைகளுக்கான ஆதரவை வழங்குவதற்கு வசதிப்படுத்தல்.

04


- பிள்ளைகளால் தயாரிக்கப்பட்ட தனியாள் விருத்தித்திட்டத்தினை கிரமமான கால ஒழுங்கில் பிள்ளைகளுடன் சேர்ந்து இல்லப்பராமரிப்பாளர், நன்னடத்தை உத்தியோகத்தர்களால் மீளாய்வு செய்வதன் மூலம் விருத்தி செய்தல்.

# 02. தனியாள் விருத்தித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்

- இளம்பராயத்தவர் ஒவ்வொருவரினதும் இலக்கு, குறிக்கோள் பற்றிய அமைப்பு.
- தன்னுடைய முழுமையான விருத்தித்திட்டத்தில் இருக்கக்கூடிய பலம், பலவீனம், தேவைகள், சவால்கள் பற்றி அடையாளம் காண்பதற்கு உதவும்.
- மெல்ல மெல்ல தனது இலக்கு நோக்கி விஞ்ஞானரீதியாக நகர்வதற்கும் தனது குடும்பசூழல் பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொள்வதற்கும் உதவும்.
- தனது சூழலில் தனது வாழ்க்கை தொடர்பான சவால்களையும் அவற்றுக்கான தந்திரோபாயங்களையும் அடையாளம் காண்பதற்கும் உதவும்.
- தன்னுடைய தொழில் இலக்கு, சமூக வாழ்க்கை இலக்கு பற்றி தீர்மானம் எடுப்பதற்கு வழிகாட்ட வசதிப்படுத்தும் திட்டத்தை தயாரிப்பதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும்
- ஒருதிட்டத்தை தயாரிப்பதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும்
- பெற்றோர், பராமரிப்பாளர்களுக்கும் இளம்பராயத்தினருக்குமிடையே ஒரு கூட்டுணர்வை ஏற்படுத்துவதன் மூலம் இளம்பராயத்தினருக்கு உதவுவதற்கு வசதிப்படுத்த முடியும்.
- ஒரு கிரமமான முறையில் தன்னுடைய தனியாள் விருத்தித்திட்டத்தினை மீளாய்வு செய்வதற்கு வசதிப்படுத்தும்.
- பிள்ளைகள் தேவையான கால எல்லையில் சுயமாக மீளாய்வு செய்வதற்கு வசதிப்படுத்தல்.
- பிள்ளைகளால் தயாரிக்கப்பட்ட திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட முறைசாராவளம், சமுதாயவளம், முறைசார்ந்தவளம் ஆகியவற்றுடன் இணைப்பை ஏற்படுத்தலும் திட்டங்களைத் தயாரித்தலும்.

# 03. அட்டைச்செய்தி

இந்த அட்டைப்படமானது கண்கவர் வண்ணத்திலும் கையாளுவதற்கு இலகுவாகவும், பிள்ளைகள் பயன்படுத்தும் ஒவ்வொரு வேளையும் அவர்களை ஊக்கப்படுத்தும் அல்லது தூண்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.



# முன்பக்க அட்டையில் குறிப்பிடுவதானது

- திட்டத்தின் தலைப்பினை மும்மொழியிலும் அச்சிடப்பட்டுள்ளது.

- பிள்ளைகளுடைய மனதில் எப்பொழுதும் இருக்கக்கூடிய வெற்றிபெறும் எண்ணத்தையும் அவ்வெற்றிக்காகப் பெற்றுக்கொள்ளப்படும் பரிசு அல்லது வெகுமதி ஆகிய எண்ணத்தையும் தூண்டத்தக்க வகையில் ஒரு குறிக்கோளை நோக்கி திட்டமிடுகின்ற செயல்முறையினை உள்ளடக்கிய பிரதிபலிப்பை காட்டுகின்ற படம் அச்சிடப்பட்டுள்ளது.

# எனது இலட்சியம்

நம் அனைவருக்கும்
ஒரே மாதிரி திறமை
இல்லாமல் இருக்கலாம்
ஆனால்
அனைவருக்கும்
திறமையை
வளர்த்துக்கொள்ள
ஒரே
மாதிரி வாய்ப்புகள்
உள்ளன



**அப்துல் கலாம்**

## நான் பின்பற்றும் இலட்சியவாதி

சுமைகளை கண்டு
நீ துவண்டு விடாதே!
இந்த உலகத்தை சுமக்கும்
பூமியே உன் காலடியில்தான்!

**விவேகானந்தர்**




உள்பக்க அட்டையின் இடது புறத்தில் பிள்ளை தனது படத்தை ஒட்டி தன்னுடைய இலட்சியத்தை எழுதத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ள இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் தன்னுடைய படத்திற்கு எதிரே தன்னுடைய இலட்சியத்தை எழுதி தன்னுடைய பிரதிபலிப்பையும் இலட்சியக்கனவையும் மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தக்கூடிய வகையில் இது அமைந்துள்ளது.

மேலும் அப்துல்கலாம், விவேகானந்தர் போன்றவர்களின் பொன்மொழிகளை அடிப்படையாகக் கொண்டு தான் பின்பற்றுகின்ற இலட்சியவாதியின் சிந்தனைத் தூண்டல்களை எழுத்து வடிவில் உருவாக்கக்கூடியதாகவும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# எனது சிந்தனையின் வெளிப்பாடுதான் நான்







**வெற்றி என்பது ஒருபயணமாகும், பயணத்தின் முடிவல்ல**

- உள்பக்க வலது பக்கத்தில் கடிகாரம் ஒன்று எவ்வாறு நேரத்தை வெளிப்படுத்துகின்றதோ அதைபோலவே பிள்ளைகளின் எண்ணம் அவர்களது செயல்வழிவினூடாக பிரதிபலிக்கும் என்பது உண்மை என்பதையும் அது குறித்தான சொல்விளக்கமும் போடப்பட்டுள்ளது.
- மேலும் 24 மணித்தியாலங்களை பிரித்துக்காட்டக்கூடிய வகையில் ஒரு வட்டக்கடிகார அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது பிள்ளை ஒன்றினுடைய நாளாந்த செயற்பாட்டினை நேர ஒழுங்கில் குறித்துக்கொள்ளவும் அந்த நேர அட்டவணைக்கேற்ப செயற்பாட்டில் விரயமாகும் நேர பொழுதுகளை கண்டறியவும் விரயமாகும் பொழுதுகளை பயனுறுதி வாய்ந்த தேவைகளை நிறைவு செய்வதற்கு தூண்டுவதற்கும் இது அமையும்.
- பிள்ளையினுடைய ஒவ்வொரு செயற்பாட்டினதும் வெற்றி அந்த இலட்சியத்தின் முடிவு அல்ல என்பதை உணரத்தக்க வகையில் ஊக்குவிப்பாக "வெற்றி என்பது ஒரு பயணமாகும், பயணத்தின் முடிவல்ல " எனும் வாசகம் இடப்பட்டுள்ளது

எனக்குத் தேவையான
எல்லா வலிமையும் உதவியும்
எனக்குள்ளேயே உள்ளது





என்னால் முடியும்



என்னால் எனது
இலட்சியத்தை
அடைய முடியும்

பின்பக்கம் பிள்ளைகளை மனதளவில் தூண்டக் கூடிய வகையிலும் அவர்களுடைய இலட்சியங்களை நோக்கி உத்வேகத்துடன் கடின உழைப்பை மேற்கொள்ளும் வகையிலும்

1. எனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் எனக்குள்ளேயே உள்ளன.

2. என்னால் முடியும்.

3. என்னால் எனது இலட்சியத்தை அடையமுடியும்.

எனும் வசனங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

**“ அடுத்த செயல்முறையை பிள்ளை பின்பற்றுவதற்கு முன்னர் வழிகாட்டுவதற்கானது”**

“People with goals succeed because they know where they are going- Earl Nighting gale”

# 04. எனது இலட்சியம்

ஒரு 15 வயதை அடைந்த பிள்ளை தான் என்னவாக வர வேண்டும் என தீர்மானிப்பதும் அதனை அடைவதற்கான வழிகளை தெரிந்து ஆழ் மனதில் ஏற்படுத்தி ஒரு கனவினை நனவாக்குவதற்கான செயற்பாட்டை பிள்ளையின் தூண்டுதலுக்குமான ஒரு வாக்கியமாக தானே தயாரித்து வைத்துக் கொள்ளுதல், இதனை தயாரிப்பதற்கு பிள்ளைக்கு பெற்றோர், பாதுகாவலர், இல்லப் பொறுப்பாளர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள் உதவ வேண்டும்.

எதற்காக இலக்கு நிர்ணயம் பிள்ளைக்கு அவசியம்,




இலக்கினை பிள்ளை நிர்ணயிப்பதற்காக, பின்வரும் பழமுறைகள் மூலம் பிள்ளைகள் தூண்டப்பட வேண்டும்.

# பழமுறை–01



பிள்ளைகளை அவர்களது இலக்கை தெரிவு செய்ய விடல், மாதிரிக் கேள்விகளை கேட்டல்.

உனது விருப்பப்படி எதனை அடைய விரும்புகிறாய்?

உன்னால் தோல்வியை தழுவாமல் என்ன செய்ய முடியும்?

# பயிற்சி-02





பிள்ளைகளிடம் அவர்களின் இலக்கிற்கான நோக்கம் என்ன என்பதனை அறிதல்.


இதன் மூலம் நீ அடையும் பெரிய ஆதாயம் என்ன?

இதன் மூலம் மற்றவர்களுக்கு எப்படி உதவலாம்?

# பழமுறை–03




அடைய எத்தனிக்கும் இலக்குகளை பழமுறைகளாகப் பிரித்தல்.



# பழமுறை–04



தடைகள் சம்பந்தமாக மூளைச் சலவை செய்தல்.

தடைகளை தாண்ட திட்டமிட ஊக்கப்படுத்தல்.






அவர்களின் கூடாத பழக்கவழக்கங்கள் தொடர்பாக உரையாடுதல். அதிலிருந்து விடுபடும் விருப்பம் தொடர்பாக பேசுதல். இவற்றை கைவிட உமக்கு விருப்பமானவற்றை செய்யலாம்.

விரும்பப்படும் இலக்கை பிள்ளையுடன் இணைந்து SMART என்ற கருத்துரு அடிப்படையில் சிறு வசனமாக எழுதுதல்.




குறிப்பிட்ட

அளவிடக்கூடிய

அடையக்கூடிய

நம்பகமான (முறை சார்ந்த பொருத்தமான)

கால வரையறையுள்ள

திறம்பட இலக்கினை அமைக்க கற்றுக்கொள்ளாதவர்கள் 92 வீதமானவர்கள் ஒருபோதும் தமது இலக்கை அடைவதில்லை. மீண்டும் மீண்டும் தனது இலக்கை எழுதி மனதில் பதிப்பதன் மூலம் 42 வீதமானவர்கள் தமது இலக்கை சுலபமாக அடைந்துள்ளார்கள். அதேபோல அதை நண்பர்கள், பெற்றோர்கள், பாதுகாவலர்களுக்கிடையில் பகிர்வதன் மூலம் 72 வீதமானவர்கள் இலக்கினை அடைந்துள்ளார்கள். – Dr.Gail Mathews

## 4.1 பிள்ளையினுடைய இலக்கை பிள்ளை கைவிடாமல் இருப்பதற்கு சில சிந்தனைகள்

1) பிள்ளை எதற்காக இலக்கை நிர்ணயித்தது என பிள்ளைக்கு நினைவூட்டல்.
2) பிள்ளை இலக்கை நோக்கி பயணிக்கும் பொழுது இடரை எதிர்நோக்கின் அதனை எதிர்கொள்ள பிள்ளை வகுத்த திட்டத்தை நினைவூட்டலும் அதனை செய்வதற்கு உதவுதலும்.
3) பிள்ளை இலக்கு நோக்கி பயணிக்கும் பொழுது மைல்கற்களை அடையும் பொழுது பாராட்டுதல்.
4) இலக்கு நோக்கி பயணிக்கும் பொழுது ஏற்படும் பின்னடைவுகளுக்கு கவனத்தை செலுத்தாது அதற்கான காரணத்தை கண்டறிந்து அதை மேம்படுத்துவதில் கவனத்தை செலுத்துதல்.
5) பிள்ளையினுடைய முயற்சி, உறுதி மற்றும் விடாமுயற்சி என்பவற்றை பாராட்டல். உதாரணமாக பிள்ளை பரீட்சையை நன்கு செய்யாவிடினும் அதற்காக மேற்கொண்ட தயார்ப்படுத்தலை பாராட்டல்.
6) பிள்ளைக்கு நேர்மறையான விடயங்களை பேசுவதற்கு பிள்ளையை பற்றியும் உங்களை பற்றியும் நேர்மறையாக பேசுவதன் மூலம் கற்றுக்கொடுத்தல். பின்வரும் வார்த்தைகளை கற்றுக் கொடுத்தல்– என்னால் முடியும், நான் எனது இலக்கை அடைய கடுமையாக முயற்சிக்கிறேன்.
7) பிள்ளை பின்னடைவுகளை சந்தித்தால் அதனை ஆராய்வதற்கு உதவுதல். தங்களுடைய அனுபவங்கள் மற்றும் பெரிய மனிதர்களுடைய அனுபவங்களை எடுத்துக் கூறுதல். உதாரணமாக எடிசன் 10,000 வது தடவை மின்குமிழை கண்டுபிடித்தார். பிள்ளையிடம் எடிசன் 9999 வது தடவை தனது முயற்சியை கைவிட்டிருந்தால் என்னவாகி இருக்கும் என கேட்கலாம்.


# 05. ஏணிப்படிகள் முறை

ஏணிப்படிகள் முறை என்பது ஒரு படிப்படியானஅணுகுமுறையாகும். மகிழ்ச்சியான மற்றும் வெற்றிகரமான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களை இந்தத் தளம் உருவாக்குகின்றது. முடிவெடுக்கும் குழுவில் உறுப்பினர்கள் எவ்வாறு நுழைகிறார்கள் என்பதை நிர்வகிக்கும் எளிய கருவியாக ஏணிப்படிகள் (Step Ladder) நுட்பம் காணப்படுகின்றது. இந்நுட்பமானது 1992இல் ஸ்டீவன் ரோகல்பெர்க் ஜேனட் பார்ன்ஸ, பாரெல் மற்றும் சார்லஸ் லோவ் ஆகியோரால் உருவாக்கப்பட்டது. இது வேறு எவராலும் செல்வாக்குச் செலுத்துவதற்கு முன்பு அனைத்து உறுப்பினர்களையும் தனிப்பட்ட மட்டத்தில் பங்களிக்க ஊக்குவிக்கின்றது. இது பலவிதமான சிந்தனைகளை விளைவிக்கின்றது.

இந்த கருவியானது பொதுவாக இலக்கினை நோக்கிய செயற்பாடுகளைக் கட்டங்கட்டமாக வரையறுத்து ஒவ்வொரு கட்டத்திலும் இருக்கக்கூடிய திறமை, செயல்முறைகள், பிரயோகிக்கவேண்டிய திறன்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய அறிவு மற்றும் அனுபவங்களை தயார்ப்படுத்தல் போன்ற செயல்முறைகளினூடாக ஒட்டுமொத்தமான மேலாண்மை மூலோபாயமான குறிக்கோளை அடைவதற்காக தயாரிக்கப்படும் ஒரு முன்னேற்பாட்டுப் பொறிமுறையாகும்.

இவை பொதுவாக நிறுவனங்களின் விருத்திக்கும் ஊழியர்களின் தொழில்வாண்மை விருத்திக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

# ஏணிப்படி முறைகள்


01
02
03
04
05
06
07
08
09
vision
இலக்கு
01
02
03
04
05
06
07
தடங்கள்
01
02
03
04
05
06
07
08
Mission
நோக்கம்

மேலே குறிப்பிடப்பட்ட ஏணிப்படிகள் முறையின் மூலம் நோக்கம், இலக்கு ஆகியனவற்றை பிள்ளை தான் பின்பற்றவுள்ள ஒவ்வொரு படிநிலை பற்றியும் அந்த ஒவ்வொரு படியிலும் தனக்கு உந்துசக்தியாக அமையக்கூடிய வளங்கள் பற்றியும் சமநேரத்தில் அதேபடியில் தனக்கு இருக்கக்கூடிய தடங்கல்கள் பற்றியும் ஆய்வு செய்வதற்கும் அதனைக் கண்டறிவதற்கும் உதவியாக இருக்கும்.

இந்த ஏணிப்படிகள் முறையூடாக ஒவ்வொரு படிநிலையையும் பிள்ளை கண்டறியவும் வளங்களைப் பூரணமாக பயன்படுத்துவதற்கும் அதேவேளை பிள்ளை கண்டறியும் தடங்கல்களை இல்லாமல் செய்வதற்கான உபாயங்களை தேடுவதற்கும் உதவிபுரியும்

இந்த ஆவணம் தனித்துவமாக அடையாளம் காட்டக்கூடியதாக இளம் பச்சை நிறத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.


# ஏணிப்படிகள் முறை

## வளங்கள்

- நூலக வசதி
- ஆசிரியர் வசதி
- பாதுகாவலரின் உதவி
- தந்தையின் உதவி
- தகுந்த சூழல்
- அடிப்படை வசதிகள் போதியளவு உண்டு
- சுதந்திரமான கல்வி கற்பதற்கான உரிமை
- போக்குவரத்து வசதி
- சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களின் உதவி
- பேச்சாற்றல்
- நம்பிக்கை
- சவாலை எதிர்கொள்ளல்
- கற்றலில் ஆர்வம்
- விடாமுயற்சி

## தடங்கல்

- உயர்தர மாணவர்களுக்கான புத்தகங்கள் இல்லை
- இடவசதி போதாமை
- தொழில் நுட்ப வசதி இன்மை
- வகுப்பறைக் கட்டட வசதி குறைவு
- மொழித்துறைக்குரிய ஆசிரியர் இல்லை (சிங்களம்)
- சுய கற்றலிற்கான நேரம் போதாமை
- இல்ல மாற்றம்
- தூக்கம்
- கற்றலில் விருப்பமின்மை




## வளங்கள்

- போசாக்கான உணவு
- சுத்தமான குடிநீர்
- சிறந்த நூலகம்
- கணினி
- கல்வி கற்கும் அறை
- விளையாட்டு மைதானம்
- பாதுகாப்பு சூழல்
- சிறந்த ஆசிரியர்கள்
- சிறந்த பாடசாலை
- நல்ல நண்பர்கள்
- திடமான எண்ணம்
- சுயசிந்தனை
- முயற்சி
- தலைமைத்துவம்

## தடங்கல்

- நித்திரை
- வீண்பேச்சு
- ஞாபகமறதி
- முரண்பாடு
- பயம்
- முயற்சியின்மை
- தாழ்வு மனப்பான்மை
- கவனமின்மை
- இலட்சியத்தை ஏளனப்படுத்துதல்
- சோம்பல்
- வறுமை
- நல்ல நண்பர்கள் இன்மை
- சிறந்த ஆசிரியர்கள் கிடைக்காமை



# 06. SWOT ஆய்வு

SWOTஆய்வானது ஒரு நிறுவனம் அன்றில் தனிநபர் அதனது களநிலையில் அவற்றின் பலம், பலவீனம், மற்றும் சூழலில் அதற்கு/அவருக்கு காணப்படுகின்ற வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக ஆய்வினை மேற்கொள்ளவும், அதற்கேற்ப நிறுவனத்தின்/தனிநபரின் பலவீனங்களை மாற்றியமைக்கவேண்டிய கோட்பாடுகளைத் திட்டமிடவும்,அச்சுறுத்தல்கள் இல்லாது அணுகவேண்டும் என்ற தந்திரோபாயங்களை வகுப்பதுடன் இவற்றின் மூலம் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி தம்மைப் பலப்படுத்துவதற்குப் பாவிக்கப்படும் ஒரு கருவியாகும்.

# SWOT ஆய்வு

## (SWOT Matrix)

| | உதவியானது (HELPFUL) | நன்மையற்றது (HARMFUL) |
|---|---|---|
| உள்வாரியானது (INTERNAL) | பலம் (Strengths) | பலவீனம் (Weaknesses) |
| வெளிவாரியானது (EXTERNAL) | வாய்ப்பு (Opportunities) | அச்சுறுத்தல் (Threats) |

இங்கு SWOT ஆய்வானது குறிக்கப்பட்ட ஒரு பிள்ளை தன்னுடைய பலம், தன்னுடைய பலவீனம் பற்றி ஆழமாகச்சிந்தித்து அதனை அறிந்து கொள்ளவும் உதவி புரியும் என்பதோடு தன்னிடம் உள்ள பலத்தினை தனது விருத்திக்கு முழுமையாக பயன்படுத்துவதற்கும் அதேவேளை தான் சார்ந்துள்ள பலவீனமான நிலைமைகளைக் கண்டறிந்து அதனை களைவதற்கும் தூண்டுதலாக அமையும்.

மேலும் தனக்கு வெளிவாரியாக கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்களை இனங்கண்டுகொள்ளவும் அதனைப் பட்டியல் படுத்திக்கொள்ளவும் முடியும்

அதேவேளை தன்னுடைய எதிர்கால முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கக்கூடிய அச்சுறுத்தலான விடயங்களை அறிந்து கொள்ளவும் அந்த விடயங்களை தனது விருத்திக்கு சாதகமாக்கிக்கொள்ளவும் முடியும்.

இந்த ஆவணமானது மஞ்சள் நிறத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

# SWOT ஆய்வு

**நன்மையானது** | **தீமையானது**

**உள்வாரியானது**

## பலம்

- பாட்டுப் பாடுதல்
- நடனம் ஆடுதல்
- கவிதை எழுதுதல்
- சித்திரம் வரைதல்
- விளையாடுதல்
- திடமான எண்ணம்
- விடாமுயற்சி
- பேச்சுத் திறன்
- உதவி செய்தல்
- பெரியோரை மதித்தல்
- உண்மை பேசுதல்

## பலவீனம்

- அதிக நித்திரை
- ஞாபக மறதி
- மனப்பயம் / சந்தேகப்படுதல்
- வெட்கம்
- முயற்சியின்மை
- வீண் பொழுது போக்கு
- சோம்பேறித்தனம்
- கோபப்படுதல்
- பொறுமையின்மை
- குடும்பம் பற்றிய கவலை

**வெளிவாரியானது**

## வாய்ப்பு

- பாதுகாப்பு சூழல்
- சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் (உணவு, கணினி, மின்சாரம். விளையாட்டு மைதானம்)
- சிறந்த நூலகம்
- ஆற்றலை வெளிப்படுத்த கலையரங்கம்
- சிறந்த ஆசிரியர்கள்
- பயிற்றுவிக்கப்பட்ட பாதுகாவலர்கள்
- நல்ல நண்பர்கள்
- தனியார் நிறுவன வகுப்புக்கள்/ மேலதிக வகுப்புக்கள்

## அச்சுறுத்தல்

- குடும்ப வறுமை
- திறமையை வெளிக்காட்ட சந்தர்ப்பம் கிடைக்காமை
- சிறந்த நன்மைகள்
- சிறந்த நூலகம் இன்மை
- இலட்சியத்தை ஏளனப்படுத்தல்
- பாதுகாப்பின்மை





# தமிழ் பேராசிரியர்

| படிநிலை | வளங்கள் | தடங்கல் |
|---|---|---|
| • O/L சித்தி<br>• A/L சித்தி<br>• பல்கலைகழகத்துக்கு தெரிவாகுதல்<br>• பல்கலைக் கழகத்தில் தமிழ் பாடத்தில் சித்தி பெறல்<br>• ஆசிரியர், உதவி விரிவுரையாளர் போன்ற பதவிகளில் தேர்ச்சி அடைதல்<br>• கலாநிதிப்பட்டம் பெறுதல்<br>• தமிழ் பேராசிரியர் ஆகுதல் | • பேச்சாற்றல்<br>• உரத்து வாசித்தல்<br>• நாவல், சிறுகதை வாசிப்பு<br>• பட்டிமன்றப் பேச்சில் ஈடுபடுதல்<br>• ஞாபக சக்தி<br>• நூலகம்<br>• பத்திரிகைகள் வாசித்தல்<br>• பொது விடயங்களை ஆராய்தல் | • மேடைக்கூச்சம்<br>• ஆங்கில அறிவு குறைவு<br>• போதிய நூல்கள் இன்மை<br>• தேடுதலில் ஆர்வம் இன்மை<br>• கணனி வசதி இன்மை<br>• தமிழ் வகுப்பறை இன்மை<br>• ஆசிரியர் பற்றாக்குறை<br>• சூழல் தடை |

# 07. வினாக்கொத்து

**(இவ் வினாக்களுக்கு விடை பகிர்வதன்மூலம் .....பகுதியில் உள்ள தனியாள் அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பது இலகுபடுத்தப்படும்)**

என்னுடைய பெயர்

...........................................................

நான் கல்வி கற்கும் தரம்

...........................................................

கல்வி கற்கும் துறை

...........................................................

எனது பாடசாலை

...........................................................

01.எனது தனித்திறமைகள் சில

...............................................................................

...............................................................................

02.தொழில்கல்வி பற்றி எனது ஆர்வம் எந்த துறை சார்ந்தது?

...............................................................................

...............................................................................

03.எனக்கு மிக விருப்பமான துறை எது?

...............................................................................

...............................................................................

04.எனது கல்வி செயற்பாடுகளில் பெற்றோர் பாதுகாவலர்கள்

அக்கறையுடன் செயற்படுகிறார்களா?....................அது பற்றிய எனது கருத்து.

.....................................................................................

.....................................................................................

05.என்னுடைய வாழ்வில் சந்தித்திருந்த சவால்கள், பிரச்சினைகளுக்கு பின்னர் ஏற்பட்ட திருப்புமுனை பற்றி சுருக்கமாக.

.............................................................................................

.............................................................................................

06.எனது மனதில் அடிக்கடி ஞாபகம் வருகின்ற விடயம் எவ்வாறு எனது பலத்தையும் திறமையையும் ஊக்குவிக்கின்றது?

.............................................................................................

.............................................................................................

07. நான் பார்த்து வியந்த நபர் யார்? ..............................................
அவர் எவ்வகையில் என்னை ஊக்குவிக்கின்றார்?

.............................................................................................

.............................................................................................

08.எனது சுக, துக்கங்களை இன்றைய நிலையில் யாரிடம் பகிர்ந்து கொள்கின்றேன்?

.............................................................................................

.............................................................................................

09.எனது போட்டியாளர்கள் எந்த வகையில் எனக்கு போட்டியினை ஏற்படுத்துகிறார்கள் என்று நான் கருதுகின்றேன்?

.............................................................................................

.............................................................................................

10.எனக்கான கல்வி சரியான முறையில் கிடைக்கப்பெறுகின்றதா?...........
எனக்கான வழிகாட்டல்கள் யாரிடமிருந்து எவ்வகையில் கிடைக்கப்பெறுகின்றன?

.............................................................................

.............................................................................

11. கல்வியின் முக்கியத்துவம் குறித்து நான் உணர்கின்றவை?

.............................................................................

கல்வியின் முக்கியத்துவம் குறித்தான விழிப்புணர்வு நான் சார்ந்த சமூகத்தில் காணப்படுகின்றதா?...............................................

12.கல்விச் செயற்பாடுகளின் போது எவ்வகையில் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துகின்றேன்?

.............................................................................

13.எனக்கு மேலதிக கல்வி கிடைக்கும் சந்தர்ப்பம் எது?.........................
அந்த கல்வி தகுந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகின்றதா? சுருக்கமாக எனது கருத்து?

.............................................................................

.............................................................................

14. எனது தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் பாடசாலை மற்றும் சமூகங்களில் எவ்வாறு உள்ளது?

.............................................................................

.............................................................................

15. எனது கல்விச் செயற்பாடுகளுக்கான செலவுகள் எவ்வாறு கிடைக்கப்பெறுகின்றது?

.............................................................................

16.கல்விக்கான நேரங்களில் இடையூறாக விளங்கும் காரணியாக நான் கருதுபவை?

..............................................................................
..............................................................................

17. எனது இலக்கை அடைவதற்குத் தடையாக இருப்பதாக நான் கருதுவது எதனை?

..............................................................................
..............................................................................

18. நான் மேலே குறிப்பிட்ட சவாலை எதிர்கொள்ள உத்தேசித்துள்ள உபாயம்

..............................................................................
..............................................................................

19.நான் என்னவாக வர விரும்புகிறேன்? எனது இலக்குகள் எவை?

கல்வி சார்ந்த இலக்கு

.............................................................................

தொழில் சார்ந்த இலக்கு

.............................................................................

சமூக மற்றும் ஆரோக்கிய வாழ்க்கை இலக்கு

.............................................................................

இந்த வினாக்கொத்தானது பிள்ளைக்கு தன்னைப்பற்றி மதிப்பிட்டுக் கொள்ளக்கூடியதான வகையில் பிள்ளையினுடைய பலம், பலவீனம், சந்தர்ப்பம், அச்சுறுத்தல், தேவைகள், தனக்கு இருக்கக்கூடிய வளங்கள் ஆகியனவற்றை அடையாளம் காணக்கூடிய வகையில் பிள்ளையின் சிந்தனையைத் தூண்டக்கூடிய கருவியாக 19 வினாக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வினாக்களினுடாக பிள்ளை தன்னுடைய கல்வி இலக்கு, தொழில் இலக்கு, சமூக மற்றும் ஆரோக்கிய வாழ்க்கை இலக்கு பற்றி சிந்திக்கத் தூண்டுவதற்கும் அந்த இலக்கினை அடையாளப்படுத்துவதற்கும் ஏற்றதாக அமையும்.

# 08. தொழிலுக்கான திறவுகோல்

உங்களுக்கு மிகவும் பொருத்தமான தொழிலை உங்கள் விருப்பப்படி தெரிவுசெய்யுங்கள்.
உங்களது தொழிலைத் தெரிவுசெய்வது ஒரு பொருத்தப்பாட்டுச் செய்முறை ஆகும்

**நீங்கள்**

உங்களது தேவைகள், பெறுமதிகள், ஆளுமை, தெரிவுகள் மற்றும் வாய்ப்புக்கள்

**தொழில்**

கேள்வி மற்றும் உங்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான தொழிலின் சாத்தியப்பாடு

- தொழிலுக்கான திறவுகோலினைப் பயன்படுத்தி உங்களுக்குப் பொருத்தமான தொழிற் துறையினைத் தெரிவுசெய்யுங்கள். அது உங்களுக்கு மிகச் சரியான வழியினைக் காட்டி உச்ச தொழில் திருப்தி மற்றும் வெற்றியை நல்கும்.

**மூலம் :** “The Career Key” by Lawrence K ‘Jones, Ph.D, NCC.
**ஒழுங்குபடுத்தல் :** Dr.**கீர்த்தி பிரேமதாச மற்றும் அஜித் ஜெயவர்த்தன**
**தொழில் வழிகாட்டல் பிரிவு, கொழும்பு பல்கலைக்கழகம்.**

## 8.1 உங்களை அளவிட

கீழ் உள்ள வசனங்களை வாசித்து அவை உங்களை எந்த அளவிற்கு விபரிக்கின்றன என தீர்மானித்துக் கொள்ளுங்கள். அவை உங்களை மிகச் சரியாக விபரிப்பின் இலக்கம் 2 என அவ் வசனத்திற்கு முன் குறிப்பிடுக. உங்களுக்கு பயன் உள்ளதாக இருக்க முடியும் என நீங்கள் கருதும் தொழில்களுக்கு இலக்கம் “1” என குறிப்பிடுக. அவை உங்களைச் சரியாக விபரிக்காவிடின் இலக்கம் 0 என குறிப்பிடுக.

### R

- – நான் கருவிகள், இயந்திரங்கள் மற்றும் விலங்குகளுடன் வேலை செய்வதனை விரும்புகிறேன்.
- – கருவிகள், இயந்திரங்கள் மற்றும் விலங்குகளுடன் வேலை செய்யும் எனது திறன் மற்ற சமமான வயதுடைய குழுக்களுடன் ஒப்பிடும் பொழுது அதிகமாகும்.
- – நடைமுறை விடயங்களுக்குப் பெறுமதியளித்தல், தாவர, விலங்கு, கருவிகள், உபகரணங்கள் அல்லது என்னால் முடியும்.
- – நான் யதார்த்தமான மனதுடன் இயந்திர மற்றும் நடைமுறை விடயங்களை விரும்புகிறேன்.

### I

- – கணித மற்றும் அறிவியல் கேள்விகளை கற்கவும், தீர்வு காணவும் விருப்பம் உடையவர்.
- – கணித மற்றும் அறிவியல் கேள்விகளை கற்றல் மற்றும் தீர்வுகாணல் என்பவற்றுக்கான எனது ஆற்றல் மற்ற சமமான வயதுடைய குழுக்களுடன் ஒப்பிடும் பொழுது அதிகமாகும்.
- – நான் அறிவியல் விஞ்ஞானத்தினை மெச்சுகிறேன்.
- –நான் ஒரு அறிவியல் அறிவார்ந்த நபர்.

# A

- – நான் கலை, நாடகம், அழகியல், நடனம், இசை மற்றும் எழுத்து போன்ற ஆக்கபூர்வமான விடயங்களை விரும்புகிறேன்.
- – கலை, நாடகம், அழகியல், நடனம், இசை மற்றும் ஆக்கபூர்வ எழுத்து போன்ற ஆக்கபூர்வமான விடயங்கள் தொடர்பான எனது ஆற்றல் மற்ற சமமான வயதுடைய குழுக்களுடன் ஒப்பிடும் பொழுது அதிகமாகும்.
- – கலை, நாடகம், அழகியல், நடனம், இசை மற்றும் ஆக்கபூர்வ எழுத்து போன்ற ஆக்கபூர்வமான விடயங்களை நான் மெச்சுகிறேன்.
- – நான் ஒரு சுயாதீன வெளிப்படையான திறமையான கலைஞர்.

# S

- – கற்பித்தல், ஆலோசனை வழங்குதல், முதலுதவி அளித்தல் போன்ற மற்றவர்களுக்கு உதவக் கூடியவற்றை செய்ய விரும்புகிறேன்.
- – நான் கற்பித்தல், ஆலோசனை வழங்குதல், முதலுதவி அளித்தல் போன்ற மற்றவர்களுக்கு உதவக்கூடியவற்றை செய்வதில் உள்ள எனது விசேட திறன் மற்ற சமமான வயதுடைய குழுக்களுடன் ஒப்பிடும் பொழுது அதிகமாகும்.
- – நான் மக்களுக்கு உதவி செய்வ தையும் சமூக பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்ற விடயங்களையும் மெச்சுகிறேன்.
- – நான் நட்புடைய, நம்பகமான மற்றவர்களை வழிநடத்தக்கூடிய நபராவேன்.

# E

- – நான் சிறந்த தலைமைத்துவ பண்பு மற்றும் பொருட்கள், எண்ணங்களை விற்பனை செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர்.
- – தலைமைத்துவ பண்பு மற்றும் பொருட்கள், எண்ணங்களை விற்பனை செய்யக் கூடிய எனது ஆற்றல் மற்ற சமமான வயதுடைய குழுக்களுடன் ஒப்பிடும் பொழுது அதிகமாகும்.
- – நான் அரசியல், தலைமைத்துவ அல்லது வணிக வெற்றிகளை மெச்சுகிறேன்.
- – நான் ஒரு துடிப்பான இலட்சிய மற்றும் சிநேகபூர்வமானவன்.

# C

- – நான் முறையாக இலக்கங்கள், அறிக்கைகள் மற்றும் இயந்திரங்களுடன் வேலை செய்வதனை விரும்புகிறேன்.
- – முறையாக இலக்கங்கள், அறிக்கைகள் மற்றும் இயந்திரங்களுடன் வேலை செய்யும் எனது திறன் மற்ற சமமான வயதுடைய குழுக்களுடன் ஒப்பிடும் பொழுது அதிகமாகும்.
- – நான் வணிக வெற்றிகளை மெச்சுகிறேன்.
- – நான் முறையான திட்டங்களை வகுக்க கூடிய நபராவேன்.

- தற்பொழுது நீங்கள் R என்ற பிரிவிற்கு பெற்ற புள்ளிகளின் மொத்தத்தினை கூட்டி கீழே குறிப்பிடுங்கள். அதேபோல I, A, S, E மற்றும் C ஆகிய பிரிவுகளுக்கும் குறிப்பிடுங்கள்.
- கீழே தரப்பட்டுள்ள தொழில்களில் உங்களுக்கு மிகவும் விருப்பமுள்ள மற்றும் பயனுள்ள தொழில்களுக்கு இலக்கம் “2” எனக் குறிப்பிடுக. உங்களுக்கு பயன் உள்ளதாக இருக்க முடியும் என நீங்கள் கருதும் தொழில்களுக்கு இலக்கம் “1” எனக் குறிப்பிடுக. உங்களுக்கு பொருத்தமில்லாத அல்லது அது பற்றி தீர்மானிக்க முடியாத தொழில்களுக்கு இலக்கம் ‘0’ எனக் குறிப்பிடுக. (இத் தொழில்களை நீங்கள் மேற்கொள்ள விருப்பமா என்ற அர்த்தத்தில் அணுக வேண்டாம். உங்களுக்கு கீழ் குறிப்பிடும் தொழிலை மேற்கொள்பவர்கள் தொடர்பான விருப்பத்திற்கேற்ப பெறுமதிகளை வழங்கவும்).

| | | |
|---|---|---|
| R – பஸ் ஓட்டுநர் (Bus Driver) | R – ட்ரக் இயந்திர வல்லுநர் (Truck Machanic) | R – தச்சர் (Carpenter) |
| S – உடல் சிகிச்சை வல்லுநர் (Physical Therapist) | S – ஆலோசகர் (Counsellor) | S – சமூக சேவையாளர் (Social Worker) |
| R – மீன் மற்றும் பண்ணை (Fish & Farm Warden) | R – விமானி (Airplane Pilot) | R - இயந்திர பொறியாளர் பாதுகாவலர் (Mechanical Engineer) |
| S – நூலகர் (Librarian) | S – பேச்சு சிகிச்சை வல்லுநர் (Speech Therapist) | S – ஆசிரியர் (Teacher) |
| R – விவசாயி (Farmer) | C – வங்கி ஆய்வாளர் (Bank Examiner) | C – வரி நிபுணர் (Tax Expert) |
| S – தாதி (Nurse) | A – நடிகர்/ நடிகைகள் (Actor/ Actress) | A – நாவலாசிரியர் (Novelist) |
| C – காப்பீட்டு எழுத்தாளர் (Insurance Clerk) | C – கணக்கெழுத்தாளர் (Book keeper) | C – வணிக ஆசிரியர் (Business Teacher) |
| A – ஆடை வடிவமைப்பாளர் (Dress Designer) | A – ஓவிய கலைஞர் (Artist) | A – பாடகர் (Singer) |
| C – நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் (Court Stenographer) | E – விற்பனை முகாமையாளர் (Sales Manager) | E – விற்பனையாளர் (Sales person) |
| A – நடன கலைஞர் (Dancer) | I – இரசாயனவியலாளர் (Chemist) | I – மின் பொறியாளர் (Electrical Engineer) |

| | | |
|---|---|---|
| C – வங்கி காசாளர் (Bank Teller) | E – அபாட்மென்ட் முகாமையாளர் (Apartment Manager) | E–உணவக முகாமையாளர் (Restaurant Manager) |
| A - இசைக் கலைஞர் (Musician) | I – வான சாஸ்திரி (Astronomer) | I - இரசாயன தொழில்நுட்பர் (Chamical Technician) |
| I – உயிரியல் அறிஞர் (Biologist) | E – அறிவிப்பாளர் (Radio/ TV Announcer) | E – காப்புறுதி முகவர் (Insurance Sales Agent) |
| E – வழக்கறிஞர் (Lawyer) | I – ஆய்வக தொழில்நுட்பவியலாளர் (Laboratory Technician) | I – ஆராய்ச்சி விஞ்ஞானி (Research Scientist) |

- **மேலே தரப்பட்டுள்ள தொழில்களுக்கு முன்னால்** R.I.A.S.E **அல்லது** C **ஆகிய ஆங்கில எழுத்துக்கள் இடப்பட்டிருப்பதனை உங்களால் அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.** R **எனும் ஆங்கில இலக்கத்தில் ஆரம்பிக்கும் தொழில்களுக்கான உங்களது புள்ளிகளின் மொத்தத்தினைக் கூட்டி கீழே தரப்பட்டுள்ள இரண்டு நிரல்களில் குறிப்பிடுக. அதேபோன்று** I, A, S, E **மற்றும்** C **ஆகிய எழுத்துக்களுக்கும் குறிப்பிடுக.**

**நிரல் 1 :** /R /I /A /S /E /C

+

**நிரல் 2 :** /R /I /A /S /E /C


=

**நிரல் 3 :** /R /I /A /S /E /C

**நிரல் மூன்றில் பெற்ற மொத்த கூட்டுத்தொகையினை அடுத்த பக்கத்தில் உள்ள தொழிலுக்கான திறவுகோலுக்காகப் பயன்படுத்துங்கள்.**

# 8.2 உங்கள் தொழிலுக்கான திறவுகோல்

- தற்பொழுது நீங்கள் தொழிலுக்கான திறவுகோலினை பிரயோகிக்கத் தயார். தொடர்வதற்கு "R" ற்கு பெற்ற மொத்த புள்ளிகளினை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உமது புள்ளிகளுக்கு உரிய கட்டத்தில் "X" குறியீட்டினை இடுக. அதேபோன்று மற்றைய ஆங்கில எழுத்துக்களுக்கும் நீங்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையின் உரிய கட்டத்தில் "X" அடையாளம் இடுக. தற்பொழுது
- அட்டவணையில் உள்ள "X" குறியீடுகளை இணைக்குக. இதுதான்
- உங்கள் தொழிலுக்கான திறவுகோல்.




- டாக்டர் ஜோன் ஹோலான்ட் அவர்கள் மக்களினை ஆறு வகைப்படுத்துகின்றார். அவையாவன.

யதார்த்தவாதி (R)
புலனாய்வாளர்கள் (I)
கலைஞர்கள் (A)
சமூகவாதி (S)
தைரியமிகுந்தவர்கள் (E)
மரபுவழியானவர்கள் (C)

- உங்களது தொழிலுக்கான திறவுகோலினில் நீங்கள் அதிக புள்ளிகளைப் பெற்ற துறை உங்களுக்கு விருப்பமான தனித்துவ தன்மை ஆகும். அடுத்து வரும் சில பக்கங்களில் நாம் பல தொழில்களை நிரற்படுத்தியுள்ளோம்.

## 8.3 முடிவுரை

ஜோன் ஹொலன்ட் உடைய ஆறு வகையான ஆளுமைகள்/ திறன்கள் ஒரு மனிதனிடம் சரியாக அடையாளம் கண்டுகொள்ளுமிடத்து அவ்வாளுமை/ திறன்களுக்குப் பொருத்தமான தொழிற் துறையினையோ, தொழிற் கல்வியினையோ அல்லது துறைசார் கற்கையினையோ தொழிற் சாவி (Career key test/ Pshchometric test) மூலம் நிபுணத்துவ துறைசார் ஆலோசகரின் உதவியுடன் தெரிவுசெய்துகொள்ள முடியும். இதன்மூலம் ஒரு மனிதனுடைய இயற்கையான தொழிற் தகமைகளுக்கேற்ப தொழிலில் வெற்றியும் சாதனையும் பெற்றுக்கொள்ள முடியும்.

# 09.தொழிற் திறவுகோலின் அடிப்படையில் தனிமனித ஆளுமைக்குப் பொருந்தும் தொழிற் துறைகள்

## 9.1 யதார்த்தபூர்வமான ஆளுமைக்குப் பொருந்தும் தொழிற்றுறைகள் –R

(a) தாவரங்கள் மற்றும் கால்நடைத்துறை

- கால்நடை வளர்ப்போர்
- விவசாயம்
- பண்ணை முகாமை
- மீன்பிடித்துறை
- பூந்தோட்டத்துறை
- கால்நடைப் பயிற்சியாளர்
- தாவரத்துறை ஆலோசனை
- நாற்றுமேடைத்துறை
- வனவளத்துறை

(b) பாதுகாப்புத்துறை

- காவல்துறை ஊழியர்
- பாதுகாப்பு உத்தியோகத்தர்
- வனப் பாதுகாப்பு
- தீயணைக்கும் படை
- இரகசியப் பரிசோதனை
- போதைப்பொருள் பரிசோதகர்
- வனவிலங்குப் பரிசோதகர்

(c) பொறியியற்துறை

- விவசாயப் பொறியியல்
- கடல், வான் பொறியியல்
- சிவில் பொறியியற்துறை
- மின் பொறியியலாளர்
- இலத்திரனியல் பொறியியலாளர்
- சூழல், பாதுகாப்பு பொறியியலாளர்

- மென்பொருள் பொறியியலாளர்
- இரசாயனப் பொறியியற்றுறை
- அணுப் பொறியியற்துறை முதலானவை

(d) தொழிநுட்பத்துறை

- மேசன்
- மின் தொழிநுட்பவியலாளர்
- மோட்டார் வாகன தொழிநுட்பவியலாளர்
- விமானத் தொழிநுட்பவியலாளர்
- அச்சுத் தொழிநுட்பவியலாளர்
- நீர் தொடர்பான தொழிநுட்பம்
- கமரா தொடர்பான தொழிநுட்பம்
- குளிரூட்டி தொடர்பான தொழிநுட்பம்
- கணினி தொடர்பான தொழிநுட்பம்

(e) வாகனம் தொடர்பான துறை

- சாரதி
- சாரதி பயிற்றுவிப்பாளர்
- விமானி
- மாலுமி
- அம்பியுலன்ஸ் சாரதி
- பஸ் வண்டி சாரதி

(f) பொறியியல் தொழிநுட்பம்

- வீதிச் சமிக்ஞை தொழிநுட்பம்
- விமான ஓடுபாதை தொழிநுட்பம்
- சூழல் பாதுகாப்பு தொழிநுட்பம்

(g) தர நிர்ணயம் தொடர்பான துறைகள்



## 9.2 ஆய்வு ரீதியான ஆளுமைப் பண்புக்குப் பொருந்தும் தொழிற்துறைகள்–I

(a) சுகாதாரத்துறை

- வைத்தியத்துறை
- கால்நடை வைத்தியத்துறை
- சத்திரசிகிச்சை நிபுணர்
- பொதுவான வைத்தியம்
- துறைசார் மருத்துவத்துறை (மகப்பேற்று, நரம்பியல் முதலான)

(b) பௌதிக விஞ்ஞானத்துறை

- புவியியல் ஆய்வு
- காலநிலை ஆய்வு
- சூழல் ஆய்வு
- சமுத்திரவியல் ஆய்வு
- வானியல் ஆய்வு
- கணிதத்துறை ஆய்வு
- மருந்தாளர்
- பௌதிகவியல்
- விஞ்ஞான ஆய்வுகூட தொழிநுட்பத்துறை

(c) உயிரியல் விஞ்ஞானத்துறை

- தாவரவியல் விஞ்ஞானத்துறை
- நுண்ணுயிரியல் விஞ்ஞானத்துறை
- மானிட விஞ்ஞானத்துறை
- கால்நடை விஞ்ஞானத்துறை
- உயிரியல் இரசாயன விஞ்ஞானத்துறை முதலான துறைகள்



# 9.3 கலைசார்ந்த ஆளுமைப் பண்புக்குப் பொருந்தும் தொழிற்துறைகள்–A

- கலை ஆலோசகர்
- நடனத்துறை
- வடிவமைப்புக்கலை
- வானொலி, தொலைக்காட்சித்துறை
- நடன ஆலோசகர்
- பாடகர்
- புகைப்படக்கலை
- உள்ளக, வெளியக அலங்காரத்துறை
- கேலிச்சித்திரம்
- ஆடை தயாரிப்பு
- ஆடை வடிவமைப்பு
- நாடகத்துறை
- திரைப்படத் தயாரிப்பு
- எழுத்தாளர்
- நூல் ஆக்கம்
- ஒப்பனைக்கலை
- கிராபிக்ஸ் முதலானவை
- விமர்சனம்
- திரைப்பட பிரதியாக்கம்
- சித்திரக்கலை
- இசையமைப்புத்துறை
- நாவல் ஆசிரியர்



# 9.4 சமூகஞ்சார் ஆளுமைப் பண்புக்குப் பொருந்தும் தொழிற்துறைகள்–S

- தாதியர்
- மனோவியல் ஆலோசகர்
- சமூகசேவை
- தொழில்சார் ஆலோசனை
- மாணவ ஆலோசனை
- சமயம்சார் செயற்பாடு
- நூலகத்துறை
- சாரணியம்
- பாடசாலைத்துறை ஆலோசனை
- வழிகாட்டுதல் ஆலோசனை
- பாடசாலை ஆசிரியர்
- விளையாட்டு பயிற்றுவிப்பாளர்
- விளையாட்டு நடுவர்
- பிரத்தியேக தாதியர்
- வழிகாட்டுநர்
- புனர்வாழ்வு ஆலோசனை முதலானவை
- ஆரம்ப ஆசிரியர்
- நூதனசாலைத்துறை
- மொழிச் சிகிச்சை
- உளவளத்துறை



# 9.5 பலம் கொண்டதான ஆளுமைப் பண்புக்கு பொருந்தும் தொழிற்துறைகள்–E

- கணக்காளார்
- கடன் உத்தியோகத்தர்
- பொருளாளர்
- தரகர்
- நிதி சேகரிப்பாளர்
- அடகு வைப்பவர்
- கொள்வனவாளர்
- ஏல விற்பனையாளர்
- வர்த்தக முகவர்
- தொடர்புசாதனத்துறை முகாமை
- மொழிபெயர்ப்புத்துறை
- நலன்புரி மேற்பார்வை
- நடுவர்கள்
- விழா செயற்பாட்டு ஆலோசனை
- வர்த்தக சாரதி
- வர்த்தகப் பிரதிநிதி
- நிதி சேகரிப்பாளர்
- பொது சுகாதார ஆலோசகர்
- பாடசாலை அதிபர்
- இடைத்தரகர்



# ௯.௬ ஒழுங்குமுறைசார் ஆளுமைப் பண்புக்குப் பொருந்தும் தொழிற்துறைகள்–C

- எழுதுவினைஞர்
- கடன் ஆலோசகர்
- நிதி உதவியாளர்– ஆலோசகர்
- செயலாளர்
- புத்தகம் பேணுநர்
- காப்புறுதி எழுதுநர்
- சம்பள எழுதுநர்
- வரவேற்பு உத்தியோகத்தர்
- கழுத விநியோகஸ்தர்
- தட்டெழுத்தாளர்
- தொலைபேசி செயற்பாட்டாளர்
- வரி எழுதுநர்
- ஹோட்டல் முகாமைத்துவம்
- ஒப்பந்த துறை
- கோவை எழுதுநர்
- தபால்துறை எழுதுநர்
- வங்கி மேற்பார்வையாளர்
- மாடி வீட்டு முகாமை
- வங்கி பரிசோதகர்



# 10. 16–18 வயதிற்குட்பட்ட சிறார்களின் தனியாள் முழுமையான விருத்தித் திட்டம் Individual Development Plan

இந்த ஆவணமே பிள்ளையுடைய வாழ்க்கையின் தூரநோக்கை நோக்கி நகர்ந்து செல்வதற்குக் குறித்த தனிநபரால் தயாரிக்கப்படுகின்ற திட்டமாகும்.

இது தயாரிக்கப்படுகின்ற ஆண்டினையும், தயாரிக்கப்படுகின்ற திகதியையும் கொண்டிருக்கும். இதனால் வெளிப்படுத்தப்படுவது என்னவெனில் பிள்ளை தனது இலக்கு நோக்கிய தனியாள் திட்டத்தை ஆண்டுதோறும் மீளாய்வு செய்வதற்கும் தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதனை மாற்றி அமைத்துக் கொள்ளக்கூடிய தந்திரோபாயங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கும் இயலுமானதாக அமையும்.

அத்துடன் வாழ்க்கையின் தூரநோக்கை தெளிவாக எழுதி அதனை நாளாந்தம் உச்சரிப்பதன் ஊடாக மனதிலே எழக்கூடிய உத்வேகம், தூண்டல் என்பன பிள்ளைக்கு சாதகமாக அமையும் மேலும் A – பலம், B – தேவைகள், C– சவால்கள், D – 18 வயதின் பின்னர் எனது திட்டம் என்கின்ற 4 பிரிவாக இதனைப்பிரித்து தனியாக அடையாளம் காண்பதற்கும் அதிலுள்ள விடயங்களை அடைந்து கொள்வதற்குரிய செயல்திட்டத்தினை நடைமுறைப்படுத்தக்கூடியதாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.



16 – 18 வயது சிறுவர்களுக்கானது

# Individual Total Development Plan of a child Age between 16- 18

## 16–18 வயதுக்குஉட்பட்டசிறுவர்களுக்கானதனியாள் முழுமையானவிருத்தித்திட்டம்

Year: 20................

Date:.....................

எனதுவாழ்க்கையின் தூரநோக்கு / My vision for my life: :..........................................................................................

| விருத்திக்கானபலங்கள், தேவைகள், சவால்கள் ஆகியவற்றை இனங்காணுதல் Identify Strength developmental needs and challenges | | ஆதாரங்களை மையமாகக் கொண்ட வெளியீடுகளில் மதிப்பீடு Evidence based Assessment Outcome Through multi-disciplinary profficinals if needed | நிறைவேற்றப்பட வேண்டியவைகள் Activities to be done | எனதுபொறுப்புக்கள் My Responsibility | என்னைச் சுற்றியுள்ள ஊக்குவிப்பாளர்கள் Supportive person around me | திகதி காலப் பகுதி Date / Duration (0 – 5 years) | வளங்களின் கிடைப்பனவு Recourses Availability | | | எனதுஅடைவுமதிப்பீடு evaluation on my achievement |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முறைசாரா வளம் (குடும்பம்) | சமுதாயவளங்கள் | முறைசார் வளம | |
| A.பலம் / Strength | 01 | | | | | | | | | |
| | 02 | | | | | | | | | |
| | 03 | | | | | | | | | |
| | 04 | | | | | | | | | |
| | 05 | | | | | | | | | |
| | 06 | | | | | | | | | |
| | 07 | | | | | | | | | |
| | 08 | | | | | | | | | |
| | 09 | | | | | | | | | |
| | 10 | | | | | | | | | |

நிரல் 1– விருத்திக்கானபலங்கள்,தேவைகள்,சவால்கள் ஆகியவற்றை இனங்காணுதல் : இது A B C D எனும் பிரதான நான்கு பிரிவுகளாகக் கொண்டதாகவுள்ளது. அவை ஒவ்வொரு பிரதான பிரிவிலும் பிள்ளைகள் தங்களால் இனங்காணப்படும் சிறிய சிறிய விடயங்களை தனித்தனியாக எடுத்து ஆராய்வார்கள்.

உதாரணமாக A –பலம் – திடமானஎண்ணம், நேரமுகாமைத்துவம், உதவிசெய்யும் மனப்பாங்கு

B - தேவைகள் – கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு மேலதிகவகுப்பு, பயற்சியும் கருத்தரங்கும்

C – சவால்கள் – நோய்கள் ஏற்படுதல், 1ஆம் தடவையில் O/L பரீட்சையில் குறைந்த பெறுபேற்றைப்பெற்றுக்கொண்டமை, எதிர்காலம் பற்றிய பயம், மனக்குழப்பம்

D – 18 வயதின் பின்னர் எனது திட்டம் – எனது கல்வி இலக்கை நிறைவு செய்தல், சமூகத்தில் அனைவருக்கும் உதவி செய்தல், பட்டப்படிப்பை நிறைவு செய்தல்

நிரல் 2 – ஆதாரங்களை மையமாகக் கொண்ட வெளியீடுகளில் மதிப்பீடு : A B C D ஆகிய பிரதான அலகினூடாக பிள்ளைகளால் உணரக்கூடிய அல்லது இனங்காணப்பட்ட மிகச்சிறிய அலகுகள் / விடயங்களின் உண்மைத்தன்மை அல்லது உறுதித்தன்மையை வலுப்படுத்தும் வகையில் இந்த விடயத்தை ஆய்வு செய்வதற்காக உதவுதல் உதாரணமாக – தவணைப்பரீட்சையில் குறைந்த புள்ளிகள்

நிரல் 3 – நிறைவேற்றப்படவேண்டியவைகள் : பிரதான அலகினுடாக இனங்காணப்பட்ட சிறிய சிறிய விடயங்கள் தொடர்பில் நிறைவேற்றப்படவேண்டியவை எவை என்பதை அடையாளப்படுத்துவதற்கு அல்லது உப குறிக்கோளாகக் கொள்வதற்கு உதவியாக அமையும் உதாரணமாக – மேலதிக வகுப்புக்கு செல்லல், குறைந்த பாடத்தில் அதிக அக்கறையுடன் அதிக நேரத்தை செலவிடல்

நிரல் – 4 எனதுபொறுப்புக்கள் : நிரல் 1, 3 இல் அடையாளம் காணப்பட்ட அல்லது அடையப்படவேண்டிய உபகுறிக்கோள் குறித்து ஒருபிள்ளை தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட வகையிலான தனது பொறுப்பு என்ன என்பதனை வலியுறுத்துவதற்கானது. உதாரணமாக – குறைந்த பாடத்தில்

அதிக அக்கறையுடன் அதிக நேரத்தை செலவிடல், அதிக பயிற்சிகளைச் செய்து புள்ளிகளை அதிகரிக்க முயற்சி செய்தல், குழுவாகக்கற்றல் தேடிக்கற்றல்

நிரல் – 5 என்னைச் சுற்றியுள்ள ஊக்குவிப்பாளர்கள் : நிரல் 1, 3, 4 இல் அடையாளம் காணப்பட்ட விடயங்களுக்கு பிள்ளைக்கு உதவி செய்யக்கூடிய நபர்கள் யார் என்பதை பிள்ளை அறிந்து கொள்ளவும் அடையாளப்படுத்தவும் அவர்களினூடான உதவியை அல்லது ஆதரவினை பெற்றுக்கொள்வதற்காகவும் இது பயன்படும் உதாரணமாக – பாடசாலை ஆசிரியர், நண்பர்கள், இல்லத்திலுள்ள மேல்வகுப்பு நண்பர்கள், பிரத்தியேகவகுப்பு ஆசிரியர்கள், பெற்றோர், பாதுகாவலர்கள்

நிரல் – 6 திகதிகாலப் பகுதி நிரல் 3 இல் குறிக்கப்பட்டுள்ள அடையாளம் காணப்பட்ட உபகுறிக்கோள்களை அடையவேண்டிய அல்லது நிறைவேற்றி முடிக்கப்பட்டிருக்க வேண்டிய காலப்பகுதியை குறிப்பதற்காக உபயோகிக்கப்படும். உதாரணமாக O/L பரீட்சைக்கு முன்பதாக August மாதம்

நிரல் 7 வளங்களின் கிடைப்பனவு ( Recourse Mapping )

நிரல் 7 A – முறைசாரா வளம் / குடும்பவளம் : நிரல் 1 , 3 , 4 , 5 ஆகியனவற்றின் அடிப்படையில் குறிக்கப்பட்ட விடயத்தை அடைந்து கொள்வதற்கு அல்லது நிறைவேற்றிக் கொள்வதற்காக இருக்கக்கூடிய முறைசாராவளம் பற்றிய ஆய்வு ஒன்றை செய்வதற்காக இது உதவும் உதாரணமாக – பெற்றோர், பராமரிப்பாளர்கள், அன்பு, ஆதரவு வழங்கல்

நிரல் 7 B – சமுதாயவளங்கள் : நிரல் 1 , 3 , 4 , 5 ஆகியனவற்றின் அடிப்படையில் குறிக்கப்பட்ட விடயத்தை அடைந்து கொள்வதற்கு அல்லது நிறைவேற்றிக் கொள்வதற்காக இருக்கக்கூடிய சமுதாயவளம் பற்றிய ஆய்வு ஒன்றை செய்வதற்காக இது உதவும் உதாரணமாக – பாடசாலை

நிரல் 7 C – முறைசார் வளம் : நிரல் 1 , 3 , 4 , 5 ஆகியனவற்றின் அடிப்படையில் குறிக்கப்பட்ட விடயத்தை அடைந்து கொள்வதற்கு அல்லது நிறைவேற்றிக் கொள்வதற்காக இருக்கக்கூடிய முறைசாராவளம் பற்றிய ஆய்வு ஒன்றை செய்வதற்காக இது உதவும் உதாரணமாக – சிறுவர் இல்லம், தனியார் வகுப்புக்கள்

நிரல் 8 – எனதுஅடைவுமதிப்பீடு : நிரல் ஒன்றில் அடையாளம் காணப்பட்ட உப பிரிவில் அடையாளம் காணப்பட்ட சிறிய சிறிய பிரிவு ஒவ்வொன்றுக்கும் மேலே கூறப்பட்ட 2 , 3 , 4 , 5 , 7 ஆகிய பொறிமுறைகளைப்பாவித்து நிரல் 6 இல்

குறிப்பிடப்பட்ட விடயம் நிறைவு செய்யப்பட்டுள்ளதா அல்லது அடையப்பட்டுள்ளதா அல்லது நிறைவு செய்யப்படாமல் அடையப்படாமல் இருப்பின் அதனை மீளாய்வுக்கு உட்படுத்தி புதிய பொறிமுறையை உருவாக்குதல்.

எவ்வாறாயினும் இது சிறுவர்களுக்கு பயன்படுத்துகின்ற காரணத்தால் அவர்களது முறைசார்ந்த கல்வி அல்லது முறைசாராக் கல்வியினை பிரதானமாக மையப்படுத்தியும் அதைசார்ந்து பிள்ளையினுடைய முழுமையான விருத்திக்கு பிள்ளையினது வயது, வளர்ச்சிக்கேற்ப இந்த விடயங்கள் பங்களிப்பு செய்வதற்கு உசிதமான முறையில் ஒவ்வொரு தனித்துவமான சிறுவர்களுக்கு பொருத்தமான விடயங்களை மட்டும் ஊக்குவிக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

A- பலம் – இதன் மூலம் பிள்ளை ஏணிப்படிமுறை, SWOT, வினாக்கொத்து ஆகிய கருவிகளினூடாக தூண்டப்பட்டு, பிள்ளையினுடைய விடயங்களை அடிப்படையாகக்கொண்டு தன்னில் காணக்கூடிய பலத்தையும் அந்த பலத்தினால் இலக்கினை அடைவதற்கு சாதகமாக பயன்படுத்தக்கூடிய விஞ்ஞான ரீதியான பொறிமுறையையும் உணர்ந்து செயற்படும்.

| B. விருத்திக்கானதேவைகள் Developmental needs | | ஆதாரங்களை மையமாகக் கொண்டவெளியீடு களில் மதிப்பீடு Evidence based Assessment Outcome | நிறைவேற்றப்பட வேண்டியவைகள் Activities to be done | எனதுபொறுப்புக்கள் My Responsibility | என்னைச் சுற்றியுள்ள ஊக்குவிப்பாளர்கள் Supportive person around me | திகதி காலப் பகுதி Date / Duration | வளங்களின் கிடைப்பனவு Recourses Availability | | | எனது அடைவுமதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முறைசாரா வளம் கூடும் | சமுதாயவளங்க | முறைசார் வளம் | evaluation on my achievement |
| உடல் ரீதியான தேவைகள் Physical - Health needs | 1.உடலிலுள்ள காயத்தால் ஏற்பட்ட நிரந்தர அடையாளங்களை இல்லாமல் செய்தல்<br>2. உடற்பருமனைக் குறைத்தல் | வைத்திய அறிக்கை | வைத்திய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுதல்<br>உணவுக்கட்டுப்பாடு<br>உடற்பயிற்சி | கிரமமானமுறையில் சிகிச்சைகளை, உணவு பழக்கவழக்கங்களை, உடற்பயிற்சியினை மேற்கொள்ளல்<br>வைத்தியரின் ஆலோசனையைப்பின்பற்றுதல் | குடும்ப உறுப்பினர்கள்<br>நண்பர்கள்<br>பாதுகாவலர்கள்<br>வைத்தியர் | | பெற்றோர் பாதுகாவலர் | வைத்தியசாலை | சிறுவர், இல்லம் நலன்விரும்பிகள் | |
| கல்விக்கான தேவைகள் Education needs | Formal<br>கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு மேலதிகவகுப்பு, பயிற்சி, மேலதிக கருத்தரங்குகள் | | | | | | | | | |
| | Non- Formal<br>தொழில் பயிற்சிக் கல்வியை பெற்றுக்கொள்ளல்<br>தொழில்பயிற்சி உபகரணங்கள் | | | | | | | | | |
| சமூக தேவைகள் Social needs | சாரணர்குழுவில் அங்கத்துவம்<br>மாணவத்தலைவர்<br>மாணவர் பாராளுமன்றகுழு அங்கத்தவர்<br>பாடசாலை மன்றங்களில் அங்கத்தவர்கள்<br>பாடசாலை அனுமதி | | | | | | | | | |
| பொருளாதார தேவைகள் Economical needs | கல்வி உபகரணங்கள்<br>மேலதிக வகுப்புக்கான கட்டணம்<br>பாடசாலைப் போக்குவரத்து | | | | | | | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உளவியல் தேவைகள் Psychological needs | ஞாபகசக்தியை அதிகரித்தல்<br>சோம்பலைக்குறைத்தல்<br>அரவணைப்பு, பாசத்திற்கு ஏங்குதல் | | | | | | | | | |
| உணர்வு ரீதியான தேவைகள் Emotional needs | பயத்தைக்கட்டுப்படுத்தல்<br>கோபத்தைக்கட்டுப்படுத்தல் | | | | | | | | | |
| ஆன்மீக ரீதியான தேவைகள் Spiritual needs | விரதங்களை அனுஸ்டித்தல் | | | | | | | | | |
| தார்மீக நெறிமுறை ஒழுங்கு<br><br>Moral/Ethical/ Discipline Aesthetic | பெரியோரை மதித்தல்<br>பெற்றோர்களைக் கனம்பண்ணுதல்<br>சத்தியத்துக்கு கட்டுப்படுதல்<br>சத்தியத்தை மதித்தல்<br>இயற்கை வளங்களை விரயமாகாது பாதுகாத்தல் [ மின்சாரம், நீர்]<br>பொதுச்சொத்துக்களைப் பாதுகாத்தல்<br><br>பொலீத்தீன் பாவனையைக் குறைத்தல் போன்ற சூழல் பாதுகாப்பில் அக்கறை கொள்ளல்<br>வழிபாடு<br>இருதடவை பல்துலக்குதல் | | | | | | | | | |

B– தேவைகள் – பிள்ளை பிள்ளைக்குரிய பல்வேறு பரிமாணங்களினூடான தேவைகளை அடையாளப்படுத்திக்கொள்ளவும் அத்தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய நபர்கள் ஆதரவளிப்போரை அடையாளம் கண்டுகொள்ளக்கூடியதாகவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேவைகளை அடையாளம் காணும் பொழுதும் ஏற்கனவே செய்முறை பயிற்சி ஒன்றினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட குறிகாட்டிகளான ஏணிப்படிமுறை, SWOT, வினாக்கொத்து ஆகியவற்றின் விளைவுகளைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும்.

முக்கியதேவைகளை குறித்து அந்த சவால்களை எதிர்கொள்வதற்கு தந்திரோபாய நிகழ்ச்சித்திட்டங்களை திணைக்களத்தின் மூலம் தயாரிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

| C. சவால்கள் Challenges | ஆதாரங்களை மையமாகக் கொண்ட வெளியீடுகளில் மதிப்பீடு Evidence based Assessment Outcome | நிறைவேற்றப்பட வேண்டியவைகள் Activities to be done | எனதுபொறுப்புக்கள் My Responsibility | என்னைச் சுற்றியுள்ள ஊக்குவிப்பாளர்கள் Supportive person around me | திகதிகாலப் பகுதி Date / Duration | வளங்களின் கிடைப்பனவு Recourses Availability | | | எனது அடைவுமதிப்பீடு evaluation on my achievement |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | முறைசாரா வளம் (குடும்பம்) | சமுதாய வளங்கள் | முறைசார் வளம் | |
| 1. நோய்கள் ஏற்படுதல் | மருத்துவ பதிவுப்புத்தகம் | சிகிச்சையை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் | 1சிகிச்சையை முறையாக ஏற்றுக்கொள்ளுதல்<br>2 மருந்துகளை உட்கொள்ளுதல் | பாதுகாவலர்கள் நண்பர்கள் | O/L பரீட்சைக்கு முன்பதாக | பெற்றோர், பராமரிப்பாளர்கள் அன்பு, ஆதரவு வழங்கல் | வைத்தியசாலை | சிறுவர் இல்லம் நலன்விரும்பிகள் | விரைவாக நோயிலிருந்து குணமடைதல் ( குறுகிய காலப்பகுதியில் நோயிலிருந்து குணமடைதல்) |
| 2. கணிதபாடம் விளங்காமை | தவணைப் பரீட்சையில் குறைந்த புள்ளிகள் | 1. கணித பாடத்தில் அதிக அக்கறையுடன் அதிக நேரத்தை செலவிடல்<br>2. மேலதிக வகுப்புக்கு செல்லல் | 1. அதிக பயிற்சிகளைச் செய்து புள்ளிகளை அதிகரிக்க முயற்சி செய்தல்<br>2. குழுவாகக்கற்றல்<br>3. தேடிக்கற்றல் | 1. பாடசாலை கணித ஆசிரியர்<br>2. நண்பர்கள்<br>3. இல்லத்திலுள்ள மேல்வகுப்பு நண்பர்கள்<br>4. பிரத்தியேகவகுப்பு ஆசிரியர்கள்<br>5. பெற்றோர், பாதுகாவலர்கள் | O/L பரீட்சைக்கு முன்பதாக August மாதம் | | பாடசாலை | சிறுவர் இல்லம் தனியார் வகுப்புக்கள் | முன்னோடிப்பரீட்சைகள் பாடசாலை மட்டக்கணிப்பீட்டின் பெறுபேறுகள் |
| 3. 1ஆம் தடவையில் O/L பரீட்சையில் குறைந்த பெறுபேறு பெற்றுக்கொண்டமை | தவணைப் பரீட்சையில் குறைந்த புள்ளிகள் | 1. குறைந்த பாடத்தில் அதிக அக்கறையுடன் அதிக நேரத்தை செலவிடல்<br>2. மேலதிக வகுப்புக்கு செல்லல் | 1. அதிக பயிற்சிகளைச் செய்து புள்ளிகளை அதிகரிக்க முயற்சி செய்தல்<br>2. குழுவாகக்கற்றல்<br>3. தேடிக்கற்றல்<br>4. மீட்டல் பயிற்சிகள் | 1. பாடசாலை ஆசிரியர்கள்<br>2. நண்பர்கள்<br>3. இல்லத்திலுள்ள மேல்வகுப்பு நண்பர்கள்<br>4. பிரத்தியேகவகுப்பு ஆசிரியர்கள்<br>5. பெற்றோர், பாதுகாவலர்கள் | O/L பரீட்சைக்கு முன்பதாக August மாதம் | | பாடசாலை | சிறுவர் இல்லம் தனியார் வகுப்புக்கள் | முன்னோடிப்பரீட்சைகள் பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் பெறுபேறுகள் |
| 4. துஸ்பிரயோகத்திற்கு உள்ளானதன் காரணமாக மனதில் அடிக்கடி ஏற்படும் ஒரு குற்ற உணர்வு | | | நல்லொழுக்கமுள்ள நற்பிரஜையாக வருதல் | | | | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 ஏதிர்காலம் பற்றிய பயம் | | | | | | | | | |
| | 6 பொறுமையின்மை | | | | | | | | | |
| | 7 மனக்குழப்பம் / பயம் | | | | | | | | | |
| | 8 கவலை | | | | | | | | | |
| | 9 சோம்பல் | | | | | | | | | |
| | 10 குடும்பவறுமை | | | | | | | | | |
| | 11 கோபம் | | | | | | | | | |

C– சவால்கள் – பிள்ளை ஏணிப்படிமுறை, SWOT, வினாக்கொத்து மூலம் அடையாளம் காணப்பட்ட சவால்களில் வரையறுக்கப்பட்ட முக்கிய சவால்களை குறித்து அந்த சவால்களை எதிர்கொள்வதற்கு தந்திரோபாய நிகழ்ச்சிதிட்டங்களை தயாரிப்பதற்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

| D. 18 வயதின் பின்னர் எனதுதிட்டம் My plan after 18 years old | ஆதாரங்களை மையமாகக் கொண்ட வெளியீடுகளில் மதிப்பீடு Evidence based Assessment Outcome | நிறைவேற்றப்படே வண்டியவைகள் Activities to be done | எனதுபொறுப்புக்கள் My Responsibility | என்னைச் சுற்றியுள்ள ஊக்குவிப்பாளர்கள் Supportive person around me | திகதிகாலப் பகுதி Date / Duration | வளங்களின் கிடைப்பனவு Recourses Availability | | | எனதுஅடைவு மதிப்பீடு evaluation on my achievement |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | முறைசாரா வளம் (குடும்பம்) | சமுதாய வளங்கள் | முறைசார் வளம் | |
| 1 எனது கல்வி இலக்கை நிறைவு செய்தல்<br>2 சமயபாடஆசிரியராக வருதல்<br>3 சமூகத்தில் அனைவருக்கும் உதவி செய்தல்<br>4 பட்டப்படிப்பை நிறைவு செய்தல்<br>5 தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளல் | | | | | | | | | |

D - 18 வயதின் பின்னர் எனது திட்டம் – 18 வயதின் பின் அதாவது பாடசாலைக்கல்வி முடிவடைந்த பின் சமூகவாழ்க்கையை நோக்கி மேற்கொள்கின்ற ஒரு திட்டமாக அமையக்கூடியதாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது நீலநிறத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளது.

# Study, Learning and Reading Strategic

## The PQRST Method

(Translated by the Department of Probation and Child Care Services, Northern Province)

### Get Studying with PQRST

**P – Preview**: Skim and scan the text to get the gist

**Q – Question**: Ask yourself questions about what you have read

**R – Read**: find the answers to your question as you read carefully

**S – Summaries**: what you read in your own words

**T – Test**: yourself immediately and later!

இந்த முறையானது மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவதற்கும் பரீட்சையின் போது அவர்களுக்கான தகவல்களை நேரடியான முறையில் வழங்குவதற்கும் உதவும். பெரும்பாலான பாடங்களில் எந்தவொரு குறிப்பிட்ட வகையான கற்றலுக்கும் ஏற்ப இந்த முறையை மாற்றியமைக்கலாம்.

**Preview:** நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய தலைப்பை அவதானித்து முக்கியமான தலைப்பை அல்லது பாடத்திட்டத்திலுள்ள முக்கியமான விடயங்களை கருத்தில் கொள்ளுதல். (தலைப்பு, வலுவான சொற்பிரயோகம், படங்கள் மற்றும் வரைபடங்கள்)

**Question:** தலைப்பை முடித்தவுடன் பதிலளிக்க விரும்பும் கேள்விகளை தயார்ப்படுத்தல். பாடநெறி அல்லது பாடத்திட்டத்தை தெரிந்து பொருத்தமாக இணைப்பதற்கு இது அவசியமானதாகும். இந்த முறையானது கற்றுக்கொண்ட வேறு தலைப்புக்களில் இருந்து முக்கியமான விடயத்தில் சில நெகிழ்வுத்தன்மையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். தேர்வொன்றில் குறிப்பிட்ட அல்லது மேலும் திறந்த முடிவுகளை வினாக்களினூடாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.


**Read:** பரீட்சை மனம் நிறைவாக அமைவதற்கு பதிலளிக்க விரும்பும் மிகப் பொருத்தமான வினாக்களை பொருத்தமான தலைப்பைக் கொண்ட குறிப்புப் புத்தகங்களினூடாக வாசித்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.

**Summary:** இது பெரும்பாலும் நெகிழ்வுத் தன்மையுடைய பகுதியாகும். மாணவர்கள் தனிப்பட்ட ரீதியில் இச்செயன்முறையினூடாக தகவல்களை சுருக்கி மையக்கருத்துக்களை வெளிக் கொணர முடியும். இதில் குறிப்புக்களை எடுத்தல், சிலந்தி வரைபடங்கள், பெயரிடப்பட்ட வரைபடங்கள், நினைவுக் குறியீடுகள், தலைப்பை சுருக்கமாக பதிவு செய்தல் என்பன அடங்கும்.

**Test / Think:** முக்கியமான தகவல்களில் கவனம் செலுத்துதல் மற்றும் தலைப்பு என்பதனை மதிப்பீடு செய்வதற்கு இந்த முறையினை பயன்படுத்திக் கொள்ள முடியும். இதனூடாக உங்களை நீங்களே கேள்வியினைக் கேட்டு விடையினைக் கண்டு கொள்ள முடியும். அத்துடன் தகவல்களை பயன்படுத்துவதற்கும் மேலும் பலவற்றை நினைவில் கொள்வதற்கும்

மற்றுமொரு வழியாகும். இந்த முறையானது தகவல்களை தொடர்ந்து கையாள நினைவூட்டுகிறது. அதனால் எந்தவொரு மதிப்பீட்டிற்கும் இது தேவையானதொன்றாகும். சில நேரங்களில் இது கற்றல் புள்ளியின் அளவை குறைக்கவும் சாதாரணமாக முடிக்க வேண்டிய பணியாக இதனைப் பார்க்க வேண்டும்.

# PQRST Reading Strategy



# நன்றியுரை

தனியாள் முழுமையான விருத்தித் திட்டம் உருவாகுவதற்கும், அதற்குரிய ஆவணங்களை தயாரிப்பதற்கும், பல்வேறு சந்தர்ப்பங்களில் மிக நெருக்கமாக ஆவணங்களை அவதானித்தும், நெறிமுறைகளுக்கு ஏற்பவும் மற்றும் களநிலையில் பரீட்சிப்பதற்கும், சாத்தியமான வழிமுறைகளையும் ஆலோசித்து இந்த ஆவணங்களைத் தயாரிப்பதற்கு எல்லா வழிகளிலும் ஆலோசனை வழங்கியும் ஆவணங்களை வடிவமைத்தும் தந்த NISD நிறுவனத்தின் பயிற்சிவிப்பாளர் திருமதி கௌரி வாசுதேவன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பக் கட்ட நிதியுதவி வழங்கிய Unicef நிறுவனத்தின் உத்தியோகத்தர்களான திரு.சுதர்மன், திருமதி ஃஷர்மிலி சதீஸ் ஆகியோருக்கும் அவர் சார்ந்த அலுவலர் குழாத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் எம் சிறுவர் நலன் சார்ந்த எண்ணத்தைப் புரிந்துகொண்டு அதனைக் கொள்கை ரீதியாக நடைமுறைப் படுத்தத்தக்க வகையில் ஆவணங்களைத் தயாரிப்பதற்கும், NISD நிறுவனத்தின் வழிகாட்டலில் இந்த ஆவணத்தைத் தயாரிப்பதற்கும், இந்நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், பொறுப்பாக இருந்த திரு. இராமசாமி இராஜன், நிலையப் பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர், FTR அவர்களுக்கும், அவர் சார்ந்த அலுவலர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

மற்றும் இந்த சிறுவர் விருத்திச் செயற் திட்டத்தினை அக்கறையோடு செயற்படுத்துவதற்கு எண்ணங்கொண்டுள்ள சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகள்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பரீட்சார்த்த நடவடிக்கைகளின்போது தங்களது முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய செஞ்சோலை சிறுவர் அபிவிருத்தி நிலையம், மகாதேவா சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஆகியவற்றின் முகாமையாளர்கள், பணிப்பாளர்கள், இதில் பங்குபற்றிய சிறுவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

மற்றும் இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திணைக்களத்தில் ஒத்துழைப்பு வழங்கிய திட்டமிடல் அலுவலர்கள், ஏனைய அலுவலர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இத்திட்டத்தின் அமுலாக்கலுக்கு வேண்டிய அட்டைப்படத்தையும், ஏனைய

ஆவணங்களையும் அச்சிட்டுத்தந்த Andra நிறுவனத்திற்கும் எமது நன்றிகள்.

இத்திட்ட விடயப்பரப்புக்களை புத்தகமாக வடிவமைத்து வெளியீட்டிற்கு வேண்டிய நிதியுதவியினை வழங்கிய THINK 2wice நிறுவனத்திற்கும் அதன் தலைவர் ஸ்ரீதரன் அவர்களுக்கும், இந் நூலை நடைமுறைப்படுத்திய Centre for Children's Happiness (CCH) நிறுவனத்திற்கும், அதன் தலைவர் திரு.ரி.ரி.மயூரன், இணைப்பாளராகச் செயற்பட்ட திரு. ஸ்ரீ.கஜேந்திரன் அவர்களுக்கும், மற்றும் புத்தகமாக வடிவமைத்த செல்வி.ஜெ.மறீன் தர்மிலா ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆணையாளர்,

நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம்,

வடமாகாணம்.

16.10.2019